Singapore Book Council
Building Our Imagine-nation

உடனடியாக வெளியிடலாம்

# இவ்வாண்டு நேரில் நடைபெறும் முதல் இலக்கிய விழா “ஒளிர்வு!”: AFCC



AFCC 2022 முக்கிய காட்சித்தொகுப்பை வடிவமைத்தவர் ஜே.ஹெச். லோ

சிங்கப்பூர், 18 மே 2022 – ஈராண்டுகாலக் கட்டுப்பாடுகளுக்கும் தூர இடைவெளிக்கும் பிறகு, விழாப் பிரியவர்கள் தங்கள் மனங்கவர்ந்த சிங்கப்பூர் சிறுவர் படைப்பிலக்கிய எழுத்தாளர்களையும் வரைவாளர்களையும் நேரில் சந்திக்க அருமையான வாய்ப்பளிக்க வருகிறது ஆசிய சிறுவர் படைப்பிலக்கிய விழா (AFCC). பதின்மூன்றாவது AFCC விழா, மே 26 முதல் 29 வரை தேசிய நூலகத்தில் நேரில் நடைபெறவிருக்கிறது.

**Singapore Book Council Limited** (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053 |+65 6342 5119
info@bookcouncil.sg | www.bookcouncil.sg

Singapore Book Council
Building Our Imagine-nation

AFCC 2022 விழாவில் பற்பல தமிழ்மொழி நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. அபி க்ரிஷ் நடத்தும் பட்டறையும் இதில் உள்ளடங்கும். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரில் நடைபெறும். முதல் பட்டறையான, சேர்ந்து உருவாக்கலாம்! - குழந்தைகளுக்கான படப் புத்தகங்கள் (Let’s Create Together! – Children’s Board Books) நிகழ்ச்சியை எழுத்தாளர் அபி க்ரிஷ் நடத்துகிறார். இந்தப் பட்டறையில், தமிழ்க் குழந்தைப் பாடல்களுடன் சொந்தமாகப் படப் புத்தகம் உருவாக்க பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டப்படும். “Talking Your Way Out!” (பேசி சமாளிக்கும் வழிமுறை) நிகழ்ச்சியிலும் அபி கலந்து கொள்கிறார். இந்த இருவழித்தொடர்பு கதைசொல்லும் அங்கம், தமிழ், மண்டரின், மலாய், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படுகிறது. சிறுவர்களுக்குத் தமிழ்மீது ஆர்வத்தை வளர்க்கும் ஒரு நிகழ்ச்சியும் தமிழில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில், சிறுவர்களுக்கான இருவழித்தொடர்பு தமிழ்ப் புத்தகங்களை வெளியிடும் செல்லமே புத்தக நிறுவனத்தின் உரிமையாளர்களும், தமிழில் சிறுவர்க்கான புத்தகங்களை எழுதும் எழுத்தாளர் ஒருவரும், தமிழ்மொழி ஆசிரியர் ஒருவரும் சேர்ந்து, சிறுவர்களிடையில் தமிழார்வத்தை வளர்க்க அவர்கள் பயன்படுத்தியுள்ள பற்பல வழிமுறைகளைப் பற்றி கலந்து பேசுவார்கள். தமிழ்மொழி வளங்கள் பற்றிய நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறுகின்றன. தாய்மொழிகளைக் கற்பதற்கான புதுமையான முனைப்புகள் போன்ற நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

சிறுவர்க்கான தமிழ்ப் படைப்பிலக்கியங்களையும் சிறுவர்களிடையில் தமிழார்வத்தையும் வளர்க்க முற்படும் இந்நிகழ்ச்சிகள் தவிர, பிரபலமான அனைத்துலகப் பேச்சாளர்களின் மெய்நிகர் அங்கங்களும் நடைபெறுகின்றன. விருது பெற்ற எழுத்தாளர் மார்கரிட்டா எங்கல் இணையம்வழி படைக்கும் விரிவுரை, பட வரைவுகளில் நகைச்சுவையைப் புகுத்தும் ஷின்சுகி யொஷிடக்கியின் இணையவழி உரை ஆகியன இதில் உள்ளடங்கும்.

நிகழ்ச்சிகளின் மேல்விவரங்களுக்குப் பின்னிணைப்பு B-யையும், பேச்சாளர்களின் சுயவிவரக் குறிப்புகளுக்குப் பின்னிணைப்பு C-யையும் பார்க்கலாம்.

பொதுமக்கள் புத்தக வரைவாளர்கள் காட்சிக்கூடத்தையும் (BIG) ஆவலுடன் எதிர்பார்க்கலாம். இந்தக் காட்சிக்கூடம், மூன்றாவது ஆண்டாக மின்னிலக்கக் கண்காட்சியாக அரங்கேறுகிறது. ஆசியாவிலும், புலம்பெயர்ந்த ஆசியர்களால் உலகெங்கிலும் வெளியிடப்பட்ட ஆகச்சிறந்த படப் புத்தக வரைவுகளைக் கண்காட்சியில் காணலாம். ஆசியாவின் பெண் வரைவாளர்களுக்கான சிறப்புக் காட்சிக்கூடமும் இவ்வாண்டு இடம்பெறுகிறது. BIG 2022 கண்காட்சி, 20 மே 2022 தேதி AFCC இணையத்தளத்தில் தொடங்கும்.

AFCC விழா இணையத்திலும் நேரிலும் நடைபெறுகிறது. இவ்விழாவில் 70க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றில் 100க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் அனைத்துலகப் பேச்சாளர்கள் கலந்து கொள்கின்றனர். நுழைவுச்சீட்டுகள் இப்போது AFCC இணையத்தளத்தில் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

AFCC 2022 விழாவுக்கு டோட் போர்டு கலை மானியம், அமெரிக்காவின் சிங்கப்பூர் தூதரகம், கொரியக் குடியரசின் சிங்கப்பூர் தூதரகம், தைப்பே பிரதிநிதித்துவ அலுவலகம், தேசிய மொழிபெயர்ப்புக் குழு ஆகியன ஆதரவளிக்கின்றன.

மேல்விவரங்களுக்கு, தயவுசெய்து afcc.com.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

## நிகழ்ச்சியின் விவரங்கள்

Singapore Book Council
Building Our Imagine-nation

தேதி: 26-29 மே 2022. நேரடியான நிகழ்ச்சிகள், முக்கிய வகுப்புகள், விரிவுரைகள் நடைபெறும் தேதிகள் உள்ளிட்ட முழுமையான அட்டவணை ஏப்ரல் மாதக் கடைசியில் அறிவிக்கப்படும்.

இடம்: இணையத்தளத்தில் (afcc.com.sg) மற்றும் நேரில். தேசிய நூலகத்தில் உள்ள குறிப்பிட்ட சில இடங்களில் நேரடியான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**ஊடக விசாரிப்புகளுக்கு, தொடர்புகொள்ளவும்:**

**ஈத்தன் லியோங்** | ethan@bookcouncil.sg | +65 6342 5122/90213611

<u>நுழைவுச்சீட்டுத் தகவல்</u>:

நுழைவுச்சீட்டு இணையத்தளம்: https://afcc2022festpasses.eventbrite.sg/?aff=PressRelease

| பிரிவு | விலை | கிடைப்பவை |
|---|---|---|
| 1-நாள் இரட்டை நுழைவு அனுமதி (மே 26, 27, 28 அல்லது 29) | S$60 | i. பட்டறைகள் உட்பட, நுழைவு அனுமதியுள்ள தேதியில் நேரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபெறலாம் (தேதிப்படி முன்பதிவு செய்வது அவசியம்)<br>ii. நுழைவு அனுமதியுள்ள தேதியில் நடைபெற்ற இணையவழி நிகழ்ச்சிகளின் காணொளிப் பதிவுகளை 30 நாட்களுக்கு அணுகலாம்<br>iii. பிரத்யேக AFCC 2022 மாநாட்டுப் பொருட்களை அணுகலாம். மாநாட்டு உரைகளின் காட்சிவில்லைகள், கையேடுகள், பேச்சாளர்களின் வாசிப்புப் பொருட்கள் இதில் உள்ளடங்கும்<br>iv. பட்டறைகள், விரிவுரைகள் உட்பட, நுழைவு அனுமதியுள்ள தேதியில் நடைபெறும் இணையவழி நிகழ்ச்சிகளுக்கு நுழைவு அனுமதி |
| | | |

| | | |
|---|---|---|
| | | v. AFCC 2022 விழாவின் தனித்தனி நிகழ்ச்சிகளின் நுழைவுச்சீட்டுகளுக்கு 15% தள்ளுபடி<br>vi. AFCC 2022 விழா புத்தகக் கடையில் 10% தள்ளுபடி<br>vii. சிங்கப்பூர் புத்தக மன்றக் கழகத்தின் 2022 நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் 10% தள்ளுபடி^<br>^ நுழைவு அனுமதிகளை வாங்கிய பிறகு, அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலில் தள்ளுபடி குறியீடுகள் அனுப்பி வைக்கப்படும் |
| 1-நாள் மெய்நிகர் நுழைவு அனுமதி (மே 26, 27, 28 அல்லது 29) | S$50 | i. நுழைவு அனுமதியுள்ள தேதியில் நடைபெற்ற இணையவழி நிகழ்ச்சிகளின் காணொளிப் பதிவுகளை 30 நாட்களுக்கு அணுகலாம்<br>ii. பிரத்யேக AFCC 2022 மாநாட்டுப் பொருட்களை அணுகலாம். மாநாட்டு உரைகளின் காட்சிவில்லைகள், கையேடுகள், பேச்சாளர்களின் வாசிப்புப் பொருட்கள் இதில் உள்ளடங்கும்<br>iii. பட்டறைகள், விரிவுரைகள் உட்பட, நுழைவு அனுமதியுள்ள தேதியில் நடைபெறும் இணையவழி நிகழ்ச்சிகளுக்கு நுழைவு அனுமதி<br>iv. AFCC 2022 விழாவின் தனித்தனி நிகழ்ச்சிகளின் நுழைவுச்சீட்டுகளுக்கு 15% தள்ளுபடி |

| | | |
|---|---|---|
| | | v. AFCC 2022 விழா புத்தகக் கடையில் 10% தள்ளுபடி<br>vi. சிங்கப்பூர் புத்தக மன்றக் கழகத்தின் 2022 நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் 10% தள்ளுபடி^<br>^ நுழைவு அனுமதிகளை வாங்கிய பிறகு, அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலில் தள்ளுபடி குறியீடுகள் அனுப்பி வைக்கப்படும் |
| 4-நாள் இரட்டை நுழைவு அனுமதி (மே 26 - 29) | S$200 | i. பட்டறைகள் உட்பட, நேரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபெறலாம் (தேதிப்படி முன்பதிவு செய்வது அவசியம்)<br>ii. மொழிபெயர்ப்பு மாநாட்டுக்கும் வெளியீட்டு மாநாட்டுக்கும் நுழைவு அனுமதி<br>iii. இணையவழி நிகழ்ச்சிகளின் காணொளிப் பதிவுகளை 30 நாட்களுக்கு அணுகலாம்<br>iv. பிரத்யேக AFCC 2022 மாநாட்டுப் பொருட்களை அணுகலாம். மாநாட்டு உரைகளின் காட்சிவில்லைகள், கையேடுகள், பேச்சாளர்களின் வாசிப்புப் பொருட்கள் இதில் உள்ளடங்கும்<br>v. பட்டறைகள், விரிவுரைகள் உட்பட, இணையவழி நிகழ்ச்சிகளுக்கு நுழைவு அனுமதி<br>vi. AFCC 2022 விழாவின் தனித்தனி நிகழ்ச்சிகளின் நுழைவுச்சீட்டுகளுக்கு 15% தள்ளுபடி |

| | | |
|---|---|---|
| | | vii. AFCC 2022 விழா புத்தகக் கடையில் 10% தள்ளுபடி<br>viii. சிங்கப்பூர் புத்தக மன்றக் கழகத்தின் 2022 நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் 10% தள்ளுபடி^<br>^ நுழைவு அனுமதிகளை வாங்கிய பிறகு, அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலில் தள்ளுபடி குறியீடுகள் அனுப்பி வைக்கப்படும் |
| 4-நாள் மெய்நிகர் நுழைவு அனுமதி (மே 26 - 29) | S$160 | i. மொழிபெயர்ப்பு மாநாட்டுக்கும் வெளியீட்டு மாநாட்டுக்கும் நுழைவு அனுமதி<br>ii. இணையவழி நிகழ்ச்சிகளின் காணொளிப் பதிவுகளை 30 நாட்களுக்கு அணுகலாம்<br>iii. பிரத்யேக AFCC 2022 மாநாட்டுப் பொருட்களை அணுகலாம். மாநாட்டு உரைகளின் காட்சிவில்லைகள், கையேடுகள், பேச்சாளர்களின் வாசிப்புப் பொருட்கள் இதில் உள்ளடங்கும்<br>iv. பட்டறைகள், விரிவுரைகள் உட்பட, இணையவழி நிகழ்ச்சிகளுக்கு நுழைவு அனுமதி<br>v. AFCC 2022 விழாவின் தனித்தனி நிகழ்ச்சிகளின் நுழைவுச்சீட்டுகளுக்கு 15% தள்ளுபடி<br>vi. AFCC 2022 விழா புத்தகக் கடையில் 10% தள்ளுபடி |

| | | |
|---|---|---|
| | | vii. சிங்கப்பூர் புத்தக மன்றக் கழகத்தின் 2022 நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் 10% தள்ளுபடி^<br>^ நுழைவு அனுமதிகளை வாங்கிய பிறகு, அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலில் தள்ளுபடி குறியீடுகள் அனுப்பி வைக்கப்படும் |

**பின்னிணைப்பு A: சிங்கப்பூர் புத்தக மன்றம், AFCC விழா பற்றிய தகவல்**

சிங்கப்பூர் புத்தகம மன்றம் (SBC) இலாப நோக்கமில்லாப் பொதுநல அமைப்பு எனும் தகுதியைப் பெற்றுள்ள சுயேச்சை அறப்பணி அமைப்பாகும். சிங்கப்பூர் எழுத்தாளர்களுக்கும் படைப்பிலக்கியத்திற்கும் ஆதரவளிப்பதற்காக, 1968ல் புத்தக மன்றம் அமைக்கப்பட்டது. படைப்பாற்றல், கற்பனைத்திறன், புதிய சிந்தனைகள், பரிவு ஆகியவற்றை உருவாக்குவதன்வழி கற்பனைத்திறன்மிகு தேசத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

**தொலைநோக்கு**: தரமான, பன்மயமான சிங்கப்பூர் படைப்பிலக்கியத்திற்கு அனைத்துலக அங்கீகாரம் பெறுதல்.

**அரும்பணி**: பல கலாசார, படைப்பிலக்கியக் கலைத் துறையை உருவாக்கி, ஆதரித்து, மேம்படுத்துதல்.

சிங்கப்பூர் புத்தக மன்றத்தின் தற்போதைய தலைவராக, பான்யான் ட்ரீ ஹோட்டல்ஸ் அண்ட் ரிசோர்ட்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் திருவாட்டி கிளேர் சியாங் பொறுப்பு வகிக்கிறார்.

சிங்கப்பூர் புத்தக மன்றத்திற்கு 2022 முதல் 2024 வரை முக்கிய நிறுவனத் திட்டத்தின்கீழ் சிங்கப்பூர் தேசியக் கலை மன்றம் ஆதரவளிக்கிறது. மேல்விவரம் அறிய, www.bookcouncil.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

சிங்கப்பூர் புத்தக மன்றம் ஏற்பாடு செய்யும் ஆசிய சிறுவர் படைப்பிலக்கிய விழா (AFCC), ஆசியாவில் படைப்பிலக்கியத்தை மையப்படுத்தும் முன்னணி விழாவாகத் திகழ்கிறது. விறுவிறுப்பான குழு கலந்துரையாடல்கள், பட்டறைகள், விரிவுரைகள், முக்கிய வகுப்புகள் ஆகியவற்றுடன், ஆசியக் கருப்பொருட்களைக் கொண்ட தரமான சிறுவர்

படைப்பிலக்கியத்தின் உருவாக்கத்தை ஊக்குவிக்கும் முக்கிய நிகழ்ச்சிகளையும் AFCC விழா வழங்குகிறது.

AFCC விழா மே 26 முதல் 29 வரை இணையத்திலும் நேரிலும் நடைபெறும்.

மேல்விவரம் அறிய, தயவுசெய்து www.afcc.com.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

## பின்னிணைப்பு B: தேர்ந்தெடுக்கப்பட்ட AFCC நிகழ்ச்சிகள்

1. தாய்மொழிகளைக் கற்பதற்கான புதுமையான முனைப்புகள்

தேதி, நேரம்: மே 26, மணி 1130 (GMT +0800)

நிகழ்ச்சி வகை: இணையத்திலும் நேரிலும்

சிறுவர்களுக்குத் தத்தம் தாய்மொழிகளில் போதிய ஆர்வம் இல்லாத பிரச்சினைக்குத் தீர்வுகாண தொடர்ந்து முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எங்கள் பேச்சாளர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண என்னென்ன முனைப்புகளை மேற்கொண்டார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். சிறுவர்களைக் கவரக்கூடிய கவிதை திரட்டு, மின்னிலக்க அம்சங்களை உள்ளடக்கிய புதிய புத்தகங்கள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

2. தமிழின்பால் சிறுவர்களுக்கு ஆர்வத்தை வளர்த்தல்

தேதி, நேரம்: மே 27, மணி 1130 (GMT +0800)

நிகழ்ச்சி வகை: நேரில்

மின்னிலக்க அம்சங்களை உள்ளடக்கும் புத்தகங்கள் முதல், வகுப்பறையில் நடத்தப்படும் கேளிக்கை விளையாட்டுகள் வரை, தமிழின்பால் சிறுவர்களுக்கு ஆர்வத்தை வளர்க்கும் விறுவிறுப்பான சில முனைப்புகள் பற்றி இந்நிகழ்ச்சியில் மேலும் தெரிந்து கொள்ளலாம்.

3. சேர்ந்து உருவாக்கலாம்! - குழந்தைகளுக்கான படப் புத்தகங்கள்

Let’s Create Together! – Children’s Board Books

தேதி, நேரம்: மே 28, மணி 1300 (GMT +0800)

நிகழ்ச்சி வகை: நேரில்

குழந்தைகளுக்கான படப் புத்தகங்களை எழுத உங்களுக்கு ஆசையாக இருக்கிறதா? எழுத்தாளர் அபி க்ரிஷ் படங்களை மையமாகக் கொண்டு குழந்தைகளை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் பாடல்களை எப்படி எழுதுவது என்று இந்த பட்டறையில் கற்றுத் தருவார். அவர்களின் பெயரையும் பிடித்த விஷயங்களையும் பாடல் வரிகளுடன் கோர்த்து எழுத உதவுவார். புத்தகங்களை உருவாக்கும் முறையைப் பற்றியும் அவர் பகிர்ந்து கொள்வார்.

Join author Abhi Krish in this hands-on session where you will create your very own board book of original Tamil nursery rhymes! Using visuals as inspiration, learn to craft fun stories and express them through catchy rhymes and songs. You can even personalise the text to include your child's name and interests! Get a sneak peek into the publishing process too and what it takes to bring your ideas into print.

4. “Talking Your Way Out!” (பேசி சமாளிக்கும் வழிமுறை)

தேதி, நேரம்: மே 28, மணி 1530 (GMT +0800)

நிகழ்ச்சி வகை: நேரில்

சிங்கப்பூர் முழுவதும் புதிரான மர்மத் தடயங்கள் தோன்றி, அவற்றின் உண்மையான அர்த்தத்தைக் கண்டுபிடிக்கச் சொல்கின்றன. இந்தச் சவாலை ஏற்றுக்கொள்கிறது ஒரு மாவீரர் குழு… அதுதான் “த சூப்பர் கோலிஸ்!” ஆனால், இந்தச் சவாலை அவர்களால் தனியாகச் செய்து முடிக்க முடியாது. சிங்கப்பூரின் பிரபலமான சிறுவர் கதைப்புத்தகக் கதாபாத்திரங்களுடன் சேர்ந்து, பன்மொழித் தடயங்களை ஆராய்ந்து, புதிரான மர்மத்திற்கு விடை காணுங்கள்.

சூப்பர் கோலிஸ்… இணைந்தன! (கோலிஸ் என்பது கோலிகளைக் குறிக்கிறது)

பங்கேற்பாளர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். இந்த இருவழித்தொடர்பு நிகழ்ச்சி ஆங்கிலத்தில் நடைபெறும். தடயங்களுக்கு விடை காண, மண்டரின், மலாய், தமிழ் மொழிகளில் (தேவைப்பட்டால்!) உதவி வழங்கப்படும். ஆறு (6) முதல் ஒன்பது (9) வயது வரையிலான சிறுவர்களுக்குப் பொருத்தமானது.

**பின்னிணைப்பு C: தேர்ந்தெடுக்கப்பட்ட AFCC பேச்சாளர்கள்**



பெயர்: அபி க்ரிஷ்

(சிங்கப்பூர்)

அபி க்ரிஷ் பங்குபெறும் நிகழ்ச்சி: சேர்ந்து உருவாக்கலாம்! - குழந்தைகளுக்கான படப் புத்தகங்கள்

(Let's Create Together! – Children's Board Books)

அபி க்ரிஷ் "நூல் மான்ஸ்டர்ஸ்" எனும் சிறுவர்க்கான இருமொழி இணையத்தளத்தின் நிறுவனர். சிறுவர்கள் விளையாட்டாகத் தமிழைக் கற்றுக்கொள்ள சமகாலக் கதைகள், பாடல்கள், அணுகுமுறைகள் போன்றவை இந்த இணையத்தளத்தில் பகிரப்படுகின்றன. விளையாட்டு, இன்னிசை, வேடிக்கை மூலம், தாய்மொழியைப் பாதுகாத்து, எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லப்போகும் தலைமுறையை அவர் உருவாக்குகிறார்.



பெயர்: புவனேஸ்வரி சுப்பிரமணியம்

(சிங்கப்பூர்)

புவனேஸ்வரி சுப்பிரமணியம் பங்குபெறும் நிகழ்ச்சி: தமிழின்பால் சிறுவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

புவனேஸ்வரி ஒரு கல்வியாளர். அவர் தனது போதனை முறையிலும் மாணவர்கள்மீதும் பற்று கொண்டவர். தமிழ் ஆசிரியரான அவர், உள்ளூர் அரசாங்கப் பள்ளியில்

தமிழ்மொழி கற்பிக்கிறார். ஆடல், பாடல், கதை சொல்லுதல், கைவினைகள் போன்றவற்றில் கலையார்வம் கொண்ட ஆசிரியரான அவர், மாணவர்களை மையப்படுத்தி பாடங்களை வடிவமைக்கிறார். அதோடு, மாணவர்கள் உற்சாகத்துடன் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளும் வகையில், பாடங்களில் நற்பண்புகளை உள்ளடக்கி, மின்னிலக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார். தாய்மொழிக் கல்வி எப்போதும் கேளிக்கையாகவும் கவரத்தக்கதாகவும் இருக்கவேண்டும் என்பதில் அவருக்கு நம்பிக்கை உண்டு.



பெயர்: ராஸ்மியா பானு யாகோப்
(சிங்கப்பூர்)
ராஸ்மியா பானு யாகோப் பங்குபெறும் நிகழ்ச்சி: தமிழின்பால் சிறுவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

ராஸ்மியா “செல்லமே புக்ஸ்” நிறுவனத்தின் இணை நிறுவனர். முழுநேர வேலை செய்யும் தாயான அவர், ஓய்வு நேரத்தில் சிறுவர் நூல் வெளியீட்டில் கால்பதித்தார். அது எதிர்பார்க்காத, ஆனால் நிறைவான பணி மாற்றமாக அவருக்கு அமைந்தது. அவரது தமிழ்மொழி ஆர்வம் ஒரு குழந்தைக்குத் தாயானபோது பூக்கத் தொடங்கியது. அன்பும், தன்னம்பிக்கையும், தாய்மொழியின்பால் பெருமையும் கொண்டவர்களாகத் தனது பிள்ளைகளை வளர்ப்பது முக்கியம் என்பதை அவர் புரிந்துகொண்டார். எனவே, தனது

உற்றத் தோழி உஷாவுடன் சேர்ந்து, தனது பிள்ளைகளுக்கும் உலகெங்கிலும் உள்ள தமிழ்க் குடும்பங்களுக்கும் தரமான, இருவழித்தொடர்பு தமிழ்ப் புத்தகங்களை உருவாக்கித்தரும் ஆர்வத்தை அவர் வளர்த்துக்கொண்டார். தொடர்புத்துறை நிபுணரான ராஸ்மியா, தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் ஏழாண்டுகால அனுபவம் உள்ளவர்.



பெயர்: சரண்யா ஜெனீட்

(கனடா)

சரண்யா ஜெனீட் பங்குபெறும் நிகழ்ச்சி: தமிழின்பால் சிறுவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

சரண்யா ஜெனீட் ஒரு நூலகரும் எழுத்தாளரும் ஆவார். அவர் எழுதிய மாயக்கல்லும் அதிவீரர்களும் என்னும் சிறுவர் நூல் தமிழ்ச் சிறார்களையும் அதிவீரர்களாக காட்டும் நோக்கோடு உருவாக்கப்பட்ட படைப்பாகும். சரண்யாவுக்கும் மூன்று சுட்டிக் குழந்தைகள் உள்ளனர். அவர்களது குறும்புத்தனத்தையும் அத்துடன் தமிழ்ச் சிறுவர்களுக்கு அவர்களைப் போன்ற உருவ அமைப்புகளை உடையவர்கள் அதிவீரர்களாக இருக்கவேண்டும் என்னும் தேவையையும் மேற்கோள் காட்டியே அவரது இந்தப் படைப்பு உருவாக்கப்பட்டது. சரண்யா இப்பொழுது டொரோன்டோ பொது நூலகத்தில் நூலகராகவும் கடமையாற்றி வருகிறார்.

Sharanja is a librarian and author. The Magic Crystal and the Superheroes was created to allow Tamil children to see themselves as superheroes too, and was inspired by her own children. She is also mom to three energetic superheroes. Sharanja is also a librarian at Toronto Public Library.



பெயர்: உஷா குமரன்

(சிங்கப்பூர்)

உஷா குமரன் பங்குபெறும் நிகழ்ச்சி: தமிழின்பால் சிறுவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

“செல்லமே புக்ஸ்” நிறுவனத்தின் இணை நிறுவனரான உஷா, முழுநேரப் பொறியாளராகவும் பணி புரிகிறார். தமிழில் திறன்மிக்க மாணவியாக இருந்த உஷாவின் பேச்சுத்தமிழ் எப்போதும் சுமாராகவே இருந்ததால், தாய்மை அடைந்தவுடன் தனது வீட்டில் ஆங்கிலத்தைப் போல தமிழும் பேச்சு மொழியாகத் திகழவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இந்த உத்வேகத்தைத் தனது உயிர்த்தோழி ராஸ்மியாவுடன் அவர் பகிர்ந்துகொண்ட போது, “செல்லமே புக்ஸ்” நிறுவனத்தை அமைக்கும் யோசனை உதித்தது. அவர்களது பிள்ளைகளின் வயதிலுள்ள சிறுவர்களுக்குத் தமிழில் தரமான புத்தகங்கள் போதிய அளவு கிடைப்பதில்லை என்பது அதற்குக் காரணம்.



பெயர்: வனிதா டொன்

(ஆஸ்திரேலியா)

வனிதா டொன் பங்குபெறும் நிகழ்ச்சி: தமிழின்பால் சிறுவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

சிங்கப்பூரராகிய வனிதா, அவரது கணவருடனும், இரு பிள்ளைகளுடனும் சிட்னியில் வசிக்கிறார். Marketing துறையில் 8 வருடங்களுக்கு மேல் வேலை செய்த இவர், வணிக மேலாண்மைத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். தன் முதல் குழந்தை பிறந்தபோது, பிள்ளைகள் தமிழ் கற்பதற்கு முறையான தமிழ் புத்தகங்கள் இல்லாததை உணரத் தொடங்கினார். இதனால், 2017-ஆம் ஆண்டில் ‘வாரணம்’ பதிப்பகத்தைத் தொடங்கி வண்ணமயமான, சுவாரசியமான தமிழ்ப் புத்தகக்களைக் குழந்தைகளுக்காக உருவாக்கும் முயற்சியில் இறங்கினார். வனிதா இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

Originally from Singapore, Vanitha lives in Sydney with her husband and two little children. Having worked as a Marketing Manager for over eight years, Vanitha holds a Masters’ degree in Business Administration. Unable to find good quality Tamil books for her own children, Vanitha turned to self-publishing and started Vaaranam Children's Books in 2017. The Vaaranam brand has now grown to eight Tamil books, including books with innovative elements such as lift-the-flaps, touch and feel

textures and even an interactive clock! Vanitha is currently working on her next book project.

---------------------------------------------------------------------------------------------------------------

AFCC விழாவின் பேச்சாளர்கள் அனைவரது படங்களையும் இங்கு காணலாம்.